தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 21, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022.

1991 ஜூலை 5, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.''

நேற்று இருந்த ஒருவர் இன்று இல்லாமல் போனார் என்று சொல்லப்படும் நிலையற்ற தன்மையை உடையதுதான் இவ்வுலகம் ஆகும்.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

1, 4–7–1991 ஆம் நாளன்று ஆளுநர் அவையில் உரையாற்றத் தொடங்கும்போது நடைபெற்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் ஆளுநர் அவர்களுடைய உரையின்போது ஏற்பட்ட ஒரு விரும்பத்தகாத சம்பவத்திற்கான என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன். (குறுக்கீடு) என்னுடைய தீர்ப்பு. (குறுக்கீடு) என்னுடைய தீர்ப்பைக் கேளுங்கள் (குறுக்கீடு).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 17-வது விதியின்படி அரசமைப்புச் சட்டத்தின் 175 மற்றும் 176-வது பிரிவின்படி அவை கூடியிருக்கும்போது, ஆளுநர் உரை நிகழ்த்துகையிலோ, உரை நிகழ்த்துவதற்கு முன்னரோ, பின்னரோ உறுப்பினர் எவரும் தமது பேச்சினாலோ, ஒழுங்குப் பிரச்சினையினாலோ, வேறு எவ்வகையிலோ தடுக்கவோ, குறுக்கீடு செய்யவோ கூடாது. எனினும், 4-7-1991 அன்று ஆளுநர் அவர்கள் அரசமைப்புச் சட்டத்தின் 176-வது பிரிவின்படி உரை நிகழ்த்துகையில், உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் எழுந்து ஆளுநர் அவர்கள் உரையாற்றுவதற்குக் குறுக்கீடு செய்தார்.

4-7-1991ஆம் நாளன்று ஆளுநர் அவையில் உரையாற்றத் தொடங்கும்போது நடைபெற்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

[பேரவைத் தலைவர்] [1991 ஜூலை 5,

அப்போது உறுப்பினர் திரு. தாமரைக்கனி தன்னுடைய இருக்கையில் இருந்து ஏதோ பேசிய வண்ணம் தன் இருக்கையை விட்டு எழுந்து வந்து உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் இருக்கைக்குப் பின்னால் நின்று கொண்டு விரும்பத்தகாத வகையில் அவர் தோள் மீது ஓங்கித் தட்டினார். இவர்கள் இருவரது செயல்களுமே விதிகளுக்கு முரண்பாடானவை என்றும், எனவே இது குறித்துப் பேரவைத் தலைவர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 4-7-1991 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தின்போது என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அக்கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவல் ஆய்வுக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கருத்தினை ஆமோதித்தனர்.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் பேரவையின் ஒழுங்கிற்குப் பெருத்த ஊறு விளைவிப்பனவாகவே நானும் கருதுகிறேன். பேரவை விதி 17-ன்படி இது தண்டனைக்குரிய செயல் என்பது தெளிவாகிறது. ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்த இருந்த வேளையில், இத்தகைய விரும்பத்தகாத நிகழ்ச்சி நடைபெறுவது ஒரு அசாதாரணமான செய்கை ஆகும். அத்தகைய அசாதாரணமான சூழ்நிலையில் நடந்த விரும்பத்தகாத இந்த நிகழ்ச்சிக்கு, உரிய தண்டனை அளிப்பதுதான் பேரவையின் கண்ணியத்தைக் காப்பதாகும்.

எனவே, பேரவை விதி 286-ல் பேரவைத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, திருவாளர்கள் ச. இராமச்சந்திரன் மற்றும் இரா. தாமரைக்கனி ஆகிய இரு உறுப்பினர்களையும் இன்று முதல் மூன்று நாட்களுக்குப் பேரவையின் நடவடிக்கைகளில் இருந்து நீக்கி வைத்துத் தீர்ப்பு வழங்குகிறேன்; அதாவது இன்று — 5-7-1991, 8-7-1991 மற்றும் 9-7-1991 ஆகிய நாட்களில் பேரவை நடவடிக்கைகளில் இருந்து நீக்கி வைத்துத் தீர்ப்பு வழங்குகிறேன்.

அவ்விரு உறுப்பினர்களும் தற்போது பேரவையில் அமர்ந்திருப்பின், உடனடியாக வெளியேற வேண்டுமெனவும் உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு.)

மாண்புமிகு உறுப்பினர் அமர வேண்டும். பேரவைத் தலைவருடைய தீர்ப்பு முறையல்ல என்று சொல்லுவது சரியல்ல. அருள்கூர்ந்து அமர வேண்டும். (குறுக்கீடு) இப்போது இரங்கற் குறிப்பு, (குறுக்கீடு) பேரவைத் தலைவருடைய தீர்ப்பு சரியில்லை என்று இந்த அவையிலேயே எழுந்து ஓர் உறுப்பினர் கூறுவது, அதையே திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்பது, அதுவும் இரங்கற் தீர்மானத்திற்கிடையே கூறுவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4-7-1991 ஆம் நாளன்று ஆளுநர் அவையில் உரையாற்றத் தொடங்கும்போது நடைபெற்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

1991 ஜூலை 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் எந்தவொரு உறுப்பினரும் எந்தக் கருத்தையும் விதி முறைகளுக்கு அப்பாற்பட்டுப் பேசக் கூடாது. அந்த வகையில் பேரவைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது வேறு ஒருவர் நின்று கொண்டு பேசக்கூடாது. அது மட்டுமல்ல. பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பை அளித்திடுவார்களேயானால் அதை எதிர்த்தோ, அதை மீறியோ பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு இடமில்லை என்பது விதிமுறைகளில் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதன் காரணமாக, அமைதியை நிலைநாட்டுவதற்கான ஒழுங்கு முறைகளைத் தாங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2. இரங்கற் குறிப்புகள்.

9-05 மணி

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடு) இரங்கற் குறிப்புகள் நேரத்தில் குறுக்கிடுவது மரபல்ல, அருள்கூர்ந்து அமர வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் விபரம் அறிந்தவர். இரங்கற் குறிப்புகளை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நேரத்தில் பேசுவது மரபல்ல என்பது உங்களுக்குத் தெரியும். இப்போது இரங்கற் குறிப்புகள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. ஆண்டி என்கிற கு. குருசாமி அவர்கள் 30-8-1990 ஆம் நாளன்றும், திரு. இ. எஸ்.எம். பக்கீர் முகமது அவர்கள் 28-1-1991 ஆம் நாளன்றும், திரு. ப. வெங்கட சுப்பிரமணியன் அவர்கள் 4-2-1991 ஆம் நாளன்றும், திரு. எம். அழகிரிசாமி அவர்கள் 10-2-1991 ஆம் நாளன்றும், திரு. கே. பொன்னையா அவர்கள் 14-2-1991 ஆம் நாளன்றும், திரு. மு. ச. சிவசாமி அவர்கள் 17-2-1991 ஆம் நாளன்றும், திரு. ஏ.எல். இராமகிருஷ்ண நாயக்கர் அவர்கள் 1-4-1991 ஆம் நாளன்றும், திரு. கா. செங்கோடன் அவர்கள் 2-4-1991 ஆம் நாளன்றும், திரு. எஸ்.எஸ். தென்னரசு அவர்கள் 13-4-1991 ஆம் நாளன்றும், திரு. சொ. கோவிந்தராஜன் அவர்கள் 29-4-1991 ஆம் நாளன்றும், திரு. மு.சி.ஆ. இரத்தினசாமித் தேவர் அவர்கள் 7-5-1991 ஆம் நாளன்றும், திரு. ஏ.கே. காளியப்ப கவுண்டர் அவர்கள் 11-6-1991 ஆம் நாளன்றும், திரு. ஏ.ஆர். சுப்பையா அவர்கள் 21-6-1991 ஆம் நாளன்றும் மறைவுற்றதை, இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.